செ.கு.எண்: 138 நாள்: 26.10.2019

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்களின் இரங்கல் செய்தி – 26.10.2019**

---

நியூஸ் 18 தமிழ்நாடு தொலைக்காட்சியின் மூத்த ஆசிரியர் திரு.எஸ்.திருநாவுக்கரசு அவர்கள் (வயது 52) பணியில் இருந்தபோது 25.10.2019 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைந்தேன்.

நியூஸ் 18 தமிழ்நாடு தொலைக்காட்சியின் மூத்த ஆசிரியர் திரு.எஸ்.திருநாவுக்கரசு அவர்கள் திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை அருகே உள்ள எரிசனம்பட்டி கிராமத்தை சேர்ந்தவர். அச்சு மற்றும் ஊடக துறையில் 25 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்துள்ளார். பழகுவதற்கு இனிமையானவர், எளிமையானவர்.

அவரது மறைவால் அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், நியூஸ் 18 தமிழ்நாடு தொலைகாட்சி நிறுவனத்திற்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்து கொள்வதோடு, அவரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**